Nobel Laureate

# MOTHER TERESA CHARITABLE TRUST

**UNO's ECONOMIC AND SOCIAL COUNCIL'S SPECIAL CONSULTATIVE STATUS NGO**

**UNITS**

Mother Teresa Forum (MTF)& Mother Teresa Auto Drivers and Unorganised Labourers Welfare Assn.

| Dr.G.K.Dhas | A.Xavier, *M.Com* | Dr. C. Vijayakumar | B.V. Selvaraj, *IAS, (Rtd)* | T.S. Vijayan, LIC & IRDA, |
|---|---|---|---|---|
| *Managing Trustee* | *Trustee* | *Trustee* | *Advisor* | *Advisor* Ex.Chairman |

## அன்னை தெரசா 108வது பிறந்தநாள் விழா

பேரன்புடையீர்,

வணக்கம். ஏழை எளிய அடித்தட்டு மக்கள் முன்னேற்றத்திற்காக தன் வாழ்நாள் முழுவதையும் அற்பணித்து எளிமையின் சிகரமாக வாழ்ந்து மறைந்தவர் அன்னை தெரசா அவர்கள். அற்பணிப்பு தொண்டுள்ளம் ஆகியவற்றிற்கு வருங்கால சந்ததியினருக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் அவர். அவருடைய வாழ்க்கை மற்றும் வாழ்ந்த விதம், மனித வரலாற்றின் ஒரு மைல் கல்லாகவும், பலர் வாழ்க்கைக்கு ஒரு உந்துதலாகவும் திகழ்கிறது. பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய முகத்திலும் அவர் இறைவனைக் கண்டார். அவர் ஏழைகளிடம் அன்பு செலுத்தி அவர்களுக்காகவே பணி செய்து, அமைதி மற்றும் அன்புடன், குழந்தைகள், அனாதைகள், நோயாளிகள், வீடற்றவர்கள், மரணப்படுக்கையிலிருப்பவர்கள், பசியோடிருப்பவர்கள், கண்பார்வையற்றோர் மற்றும் தொழுநோயாளிகளின் மீது மிகுந்த அக்கறைகொண்டு தன்னிகரில்லா மனிதநேயத்துடன் செயல்பட்டு, அவர்களுடைய நம்பிக்கையாகத் திகழ்ந்தார். அன்னை தெரசா அவர்களின் சேவை உலகெங்கிலும் வாழும் மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அன்னை தெரசா அவர்கள் இயற்கை எய்திய 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள், உலகமே துயரத்தில் ஆழ்ந்திருந்தது. இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட இலட்சக்கணக்கான மக்கள் கதறி அழுத காட்சி தான் **அன்னை தெரசா அறக்கட்டளை – MTCT (Mother Teresa Charitable Trust)** உருவாக உந்துதலாக அமைந்தது. அது உருவான நாளிலிருந்தே அந்த கருணை தேவதையின் அடியொற்றி, ஏழை மற்றும் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களுக்காகப் பணியாற்றி வருகிறது. **அன்னை தெரசா அறக்கட்டளையும்** அதன் துணை அமைப்புகளான **அன்னை தெரசா பேரவை** மற்றும் **அன்னை தெரசா ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர் நலச் சங்கம்,** மனித சமுதாய முன்னேற்றம் மற்றும் அவர்களுடைய மறுவாழ்விற்காக, அரசு சார்பற்ற நிறுவனமாக செயல்பட்டு ஜாதி, மதம், மொழி, இனப்பாகுபாடின்றி, ஏழை மக்களின் மேம்பாட்டிற்காகப் பணியாற்றி வருகிறது. அண்மையில் இந்நிறுவனம் **உலக ஐக்கிய நாடுகள் சபையின் சமூக பொருளாதார கவுன்சிலில் சிறப்பு உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது.**

அன்னை தெரசா அவர்களுடைய **108–வது பிறந்த தினம்** வருகிற ஆகஸ்ட் மாதம் 26–ம் தேதி வருகிறது.

இந்த பிறந்த தினத்தை முன்னிட்டு நம்முடைய அறக்கட்டளை சார்பில் ஏழை எளிய மக்களுக்கு நல உதவி வழங்குதல், ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பது, நமது நிறுவனம் **ஐக்கிய நாடுகள் சபையின் சமூக பொருளாதார கவுன்சிலில் சிறப்பு உறுப்பினராக அங்கம் பெற்றதை பாராட்டுதல்,** ஆகிய விழா நிகழ்வுகள் வருகிற **செப்டம்பர் மாதம் 13–ம் தேதி,** வியாழக்கிழமை **மாலை 4.00 மணி அளவில், சென்னை–6, அண்ணாசாலை,காமராஜர் அரங்கத்தில்** வைத்து நடைபெற உள்ளது.

இவ்விழாவில், கர்நாடக நீர்பாசன அமைச்சர் **திரு.D.K.சிவகுமார்** கலந்துகொள்கிறார். மேலும் **சினிமா பிரபலங்கள், தமிழக அமைச்சர்கள், புதுச்சேரி முதலமைச்சர் திரு.V. நாராயணசாமி, உயர்நீதி மன்ற நீதிபதி, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத தலைவர்கள்**, மற்றும் பல்வேறு முன்னணி தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

விழாவில் ஏழை எளிய மக்களுக்கு கீழ்கண்ட நல உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

i) ஸ்கூல் பேக் (School bags) மற்றும் நோட்டு புத்தகங்கள் 2000 ஏழை மாணவர்களுக்கு
ii) 50 விதவை பெண்களுக்கு தையல் எந்திரம்
iii) 25 நபர்களுக்கு இஸ்திரி பெட்டி
iv) உடல் ஊனமுற்றவர்கள் 25 நபர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்
v) 2000 ஏழை பெண்களுக்கு புடவை
vi) 1000 முதிய ஆண்களுக்கு வேஸ்டி
vii) 2000 மாணவர்களுக்கு T–சர்ட்
viii) 5000 நபர்களுக்கு இரவு உணவு

தாங்கள் இவ்விழாவில் நேரில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். மேலும் தங்களால் இயன்ற மேற்கண்ட பொருட்களில் ஏதேனும் நன்கொடையாக வழங்கிடவும் வேண்டுகிறோம். தாங்கள் வழங்கும் பொருட்களில் தங்கள் நிறுவனத்தின், **பெயர் மற்றும் Logo** பொருட்களில் குறிக்கப்படுவதோடு அரங்கத்திலும் விளம்பரப்படுத்தப்படும் என்பதனையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இது தவிர தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும்/படிக்கும் அலுவலர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரை அன்னை தெரசா அவர்களின் பிறந்த தினத்தை அவரவர்கள் பகுதிகளில் கொண்டாட அறிவுறுத்துமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இதன் மூலம், சமுதாயத்தில் ஏழை எளிய மக்கள் மேல் அவர்களுக்கு கரிசனையும், பரிவும் ஏற்பட வாய்ப்பாக அமையும். இது எதிர்கால சந்ததிகள் மத்தியிலும் தொடர வாய்ப்பாக அமையும்.

***"We ourselves feel that what we are doing is just a drop in the ocean***
***But, the ocean would be less because of that missing drop"*** ***- Mother Teresa***

அன்புடன்

**Dr. G.K. தாஸ்**
**நிறுவனர்**

**குறிப்பு:**
Nobel Laureate Mother Teresa Charitable Trust-ன் அங்கீகாரம்

i) Nithi Ayog Unique: **IDNo.TN/2009/0019981**
ii) Pan No : **AABTM 0430B**
iii) 80G (V)& (VI) Income Tax Exemption No.DIT(E) 2(16)/98-99 dt.15 2009
iv) For more details please log in to www.mtct.info

***Nobel Laureate***
**Mother Teresa Charitable Trust**
**No. 43, N.M. Road, Choolaimedu, Chennai - 600 094, Ph:044-23743883, 044 23742699,**
**Email: mtct1997@gmail.com, mtct1997@yahoo.co.in**
**Web: www.mtct.info,www.motherteresacharities.org**